**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**
**பெரிய திருமொழி**
**இரண்டாம் பத்து**

**ஏழாம் திருமொழி - திவளும்**
**திருவிடவெந்தை**
**(தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்கும் பாசுரம்)**

** திவளும் வெண்மதி போல் திருமுகத்து அரிவை *
செழுங்கடல் அமுதினில் பிறந்த
அவளும் * நின் ஆகத்து இருப்பதும் அறிந்தும் *
ஆகிலும் ஆசை விடாளால் **
குவளை அங்கண்ணி கொல்லி அம்பாவை * சொல்லு
நின் தாள் நயந்திருந்த
இவளை * உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 1

துளம் படு முறுவல் தோழியர்க்கு அருளாள் *
துணைமுலை சாந்து கொண்டு அணியாள் *
குளம் படு குவளைக் கண்ணிணை எழுதாள் *
கோல நல்மலர் குழற்கு அணியாள் **
வளம் படு முந்நீர் வையம் முன் அளந்த *
மால் என்னும் மால் இன மொழியாள் *
இளம் படி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 2

சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும் *
தடமுலைக்கு அணியிலும் தழலாம் *
போந்த வெண்திங்கள் கதிர் சுட மெலியும் *
பொருகடல் புலம்பிலும் புலம்பும் **
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம் *
வளைகளும் இறை நில்லா * என்தன்
ஏந்திழை இவளுக்கென் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 3

ஊழியிற்பெரிதால் நாழிகை என்னும் *
ஒண்சுடர் துயின்றதால் என்னும் *
ஆழியும் புலம்பும் அன்றிலும் உறங்கா *
தென்றலும் தீயினில் கொடிதாம் **
தோழியோ! என்னும் துணைமுலை அரக்கும் *
சொல்லுமின் என் செய்கேன்? என்னும் *
ஏழை என் பொன்னுக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 4

ஓதிலும் உன் பேர் அன்றி மற்றோதாள் *
உருகும் நின் திருவுரு நினைந்து *
காதன்மை பெரிது கையறவு உடையள் *
கயல் நெடுங்கண் துயில் மறந்தாள் **
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது *
தெள்ளியள் வள்ளி நுண்மருங்குல் *
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 5

தன் குடிக்கு ஏதும் தக்கவா நினையாள் *
தடங்கடல் நுடங்கெயில் இலங்கை *
வன் குடி மடங்க வாள் அமர் தொலைத்த *
வார்த்தை கேட்டு இன்புறும் மயங்கும் **
மின் கொடி மருங்குல் சுருங்க மேல் நெருங்கி *
மென்முலை பொன் பயந்திருந்த *
என் கொடி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 6

உளம் கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும் *
உனக்கன்றி எனக்கு அன்பு ஒன்றிலளால் *
வளங்கனி பொழில் சூழ் மாலிருஞ்சோலை *
மாயனே! என்று வாய் வெருவும் **
களங்கனி முறுவல் காரிகை பெரிது *
கவலையோடு அவலம் சேர்ந்திருந்த *
இளங்கனி இவளுக்கென் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 7

** அலங்கெழு தடக்கை ஆயன் வாய் ஆம்பற்கு *
அழியுமால் என் உள்ளம் என்னும் *
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும் *
போதுமோ நீர்மலைக்கு என்னும் **
குலங்கெழு கொல்லி கோமளவல்லி *
கொடி இடை நெடு மழைக் கண்ணி *
இலங்கெழில் தோளிக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 8

பொன் குலாம் பயலை பூத்தன மெந்தோள் *
பொருகயல் கண்துயில் மறந்தாள் *
அன்பினால் உன் மேல் ஆதரம் பெரிது *
இவ்வணங்கினுக்கு உற்ற நோய் அறியேன் **
மின் குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி *
வீங்கிய வனமுலையாளுக்கு *
என் கொலாம்? குறிப்பில் என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 9

** அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய *
எம் மாயனே! அருளாய் *
என்னும் இன்தொண்டர்க்கு இன்னருள் புரியும் *
இடவெந்தை எந்தை பிரானை **
மன்னு மாமாட மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் *
பன்னிய பனுவல் பாடுவார் *
நாளும் பழவினை பற்றறுப்பாரே 10

**அடிவரவு:** திவளும் துளம் சாந்தம் ஊழியில் ஓதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம் திரிபுரம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---